1994 ஏப்ரல் 20]

வந்துள்ளது. அவைகளைப் பார்த்து, அதைப்போல சேலம் மாவட்டம் பச்சைமலையில் உள்ளது மட்டுமல்லாது மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப்பிரதேசங்களிலும் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்துவரும் மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குவது பற்றி முறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.*304*, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை, (குறுக்கீடு) திரு. கே. சிங்காரம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

304 –

ஓசூர் வட்டத்தில், இனாம் கிராமங்களில் அரசு நில உடமை ஏற்படுத்தல்.

***14524** திரு. கே.ஏ. மனோகரன்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் வட்டத்தில் உள்ள சென்னசந்திரம், மாரசந்திரம், இனல்பசந்திரம் மற்றும் வைரசந்திரம் போன்ற கிராமங்கள் இன்னும் அரசு நில உடமை ஏற்படுத்தப்படாமல், இனாம் கிராமங்களாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை சீர்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஓசூர் வட்டத்தில் உள்ள செல்வசந்திரம், மாரசந்திரம், இனல்பசந்திரம் மற்றுமுள்ள இடங்கள், கிராமங்கள் அரசுடமை ஏற்படுத்தப்படாமல் இனாம் கிராமங்களாக உள்ளன. அதை அரசு எடுக்கிறபோது, நீதிமன்றத்திற்குச் சென்று தடையுத்தரவு பெற்றிருக்கிறார்கள். புதுடில்லியில் உள்ள உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வழக்கு முடிந்தவுடன் மேற்கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட நான்கு கிராமங்கள் மட்டும் தமிழ்நாட்டிலே அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்படாத கிராமங்களாக இருக்கின்றன. இவை இனாம் கிராமங்களாக உள்ள காரணத்தினாலே அந்தக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் வளர்ச்சிப் பணிகளுக்கு வங்கிக்

கடன் பெறுவதற்கோ மின் இணைப்புப் பெறுவதற்கோ எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத காரணத்தினால் அந்த மக்கள் எல்லாம் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வழக்கானது 20 ஆண்டுகளாக வழக்கு மன்றத்திலே உள்ள காரணத்தால் இந்த வழக்கைத் துரிதப்படுத்தி முடிப்பதோடு மட்டுமல்லாமல், முடிந்தால் இதற்காக ஒரு தனிச்சட்டம் பிறப்பிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒரு அவசரச் சட்டம் நிறைவேற்றத் தேவையில்லை. டெல்லியில் இருக்கிற தமிழ்நாடு அட்வகேட் ஆன் ரிக்கார்டு அவர்களிடத்திலே சொல்லி இதைத் துரிதப்படுத்த அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணப்படி அங்கேயிருக்கிற ஏழை எளிய பொதுமக்களுக்கு வருகிற நன்மை காலதாமதப்படுத்தப்படுகிறது, தடையேற்படுகிறது என்று சொன்ன காரணத்தால் இதை விரைவுபடுத்துவதற்கு அரசு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10.15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *305* மற்றும் *306* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் *307*, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

307–

பெரணமல்லூர் ஒன்றியம், தாடி–நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்

***21979** திரு. ஆ.கு. சீனிவாசன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பெரணமல்லூர் ஒன்றியம், *2000* மக்கள் தொகையுள்ள தாடி-நொளம்பை கிராமத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும்?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS